සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

47650

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

12 T I

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2009 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2009 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2009

| | |
|---|---|
| ශෛවනෙරි I<br>சைவநெறி I<br>Saivaneri I | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>*Three hours* |

கவனிக்க :

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.

(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

(v) I ஆம் II ஆம் விடைத்தாள்களை ஒன்றாகக் கட்டிக் கையளிக்க.

1. விநாயகப் பெருமானின் திருவருளைப் பெற்ற பெருமைக்கும் தில்லையில் பூட்டி வைக்கப்பட்டிருந்த தேவார ஏடுகளை மீட்டுத்தந்த சிறப்புக்கும் உரியவர்
   (1) நம்பியாண்டார் நம்பி (2) அருணகிரிநாதர்
   (3) திருமங்கை ஆழ்வார் (4) சேக்கிழார்

2. ஆதியும் அந்தமும் இல்லாதவர்
   (1) தேவர் (2) கடவுள் (3) முனிவர் (4) இந்திரன்

3. பின்வருவனவற்றுள் சிவ விரதங்கள் அடங்கும் தொகுதி
   (1) கந்தசஷ்டி, மகாசிவராத்திரி, பெருங்கதை
   (2) கேதாரகௌரி விரதம், தைப்பூசம், மாசிமகம்
   (3) சிவராத்திரி, கேதாரகௌரி விரதம், பிரதோஷ விரதம்
   (4) திருவெம்பாவை, பங்குனித் திங்கள், நவராத்திரி

4. கடவுளின் ஐந்தொழில்கள்
   (1) பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன்
   (2) அருவம், உருவம், அருவுருவம், திருப்பெருவடிவம், விஸ்வரூபம்
   (3) நல்வினை, தீவினை, ஆணவம், கன்மம், மாயை
   (4) படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்

5. மருத்துநீரைத் தலையில் தேய்த்து நீராடிப் புத்தாடை அணிந்து கொண்டாடும் பண்டிகை
   (1) தைப்பொங்கல் (2) சித்திரை வருடப் பிறப்பு
   (3) தீபாவளி (4) ஆடிப்பிறப்பு

6. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய தெய்வத் தமிழ்ப் பாடல்கள்
   (1) திருவாசகம் எனப்படும். (2) திருப்புகழ் எனப்படும்.
   (3) சிவஞானபோதம் எனப்படும். (4) தேவாரம் எனப்படும்.

7. சிவாலய தரிசனம் செய்த பின்னர், சண்டேசுரரை வணங்கி சிவபூசையின் பயனைத் தந்தருளும்படி வேண்டிக் கொள்வது மரபு. சண்டேசுரரை வணங்கும் முறை
   (1) மூன்று முறை கைதட்டி வணங்குதல் (2) இருகைகளையும் கூப்பி வணங்குதல்
   (3) சுற்றி வருதல் (4) ஓரிடத்தில் அமர்ந்து தியானித்தல்

[பக். 2 ஐப் பார்க்க

8. நவக்கிரக வழிபாட்டின்போது பாடவேண்டிய தேவாரம்
   (1) "வேயுறு தோளி பங்கன் ..."
   (2) "திருக்கோயிலில்லாத திருவி லூரும் ..."
   (3) "சங்கநிதி பதுமநிதி யிரண்டும் ..."
   (4) "விநாயகனே வெவ்வினையை வேரறுக்க ..."

9. சேக்கிழார் பெருமான் இயற்றிய புராண நூல்
   (1) திருவிளையாடற்புராணம்
   (2) திருவாதவூரடிகள் புராணம்
   (3) திருத்தொண்டர் பெரியபுராணம்
   (4) சிவபுராணம்

10. பன்னிரு ஆழ்வார்களுள் இருவர் அடங்கும் தொகுதி
   (1) சம்பந்தர், சுந்தரர்
   (2) விவேகானந்தர், விபுலாநந்தர்
   (3) சேந்தனார், காரைக்காலம்மையார்
   (4) பெரியாழ்வார், ஆண்டாள்

11. இலங்கையிலுள்ள திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் ஆகிய தலங்கள் மீது தேவாரப் பதிகங்கள் பாடியவர்
   (1) அருணகிரிநாதர்
   (2) திருநாவுக்கரசர்
   (3) திருஞானசம்பந்தர்
   (4) மாணிக்கவாசகர்

12. சுந்தரரைக் குறிக்கும் பாடலடி
   (1) "பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் ..."
   (2) "ஆழிமிசைக் கன்மிதப்பில் அமர்ந்த பிரான் ..."
   (3) "வாழிதிருநாவலூர் வன்றொண்டர் ..."
   (4) "வாழிசித்தாந்த தத்துவஞானிகள் ..."

13. சந்தான குரவர்கள்
   (1) வேதாந்த ஞானிகள்.
   (2) சைவநாயன்மார்கள்.
   (3) தோத்திர நூல்களை இயற்றியவர்கள்.
   (4) சைவசித்தாந்த தத்துவஞானிகள்.

14. சைவ ஆலயங்களில் நடைபெறும் மகோற்சவம்
   (1) இறைவனின் ஐந்தொழில்களைக் குறிக்கின்றது.
   (2) இறைவனின் படைத்தல் தொழிலைக் குறிக்கின்றது.
   (3) ஆலயத்தின் செல்வச் செழிப்பைக் குறிக்கின்றது.
   (4) இறைவனின் அவதார மகிமையைக் குறிக்கின்றது.

15. புலாலுண்ணலைச் சைவநெறி அனுமதிப்பதில்லை. ஏனெனில்
   (1) கொல்லாமையைச் சிறந்த அறமெனக்கொள்வதால்
   (2) பொய்யாமையைச் சிறந்த அறமெனக்கொள்வதால்
   (3) புலால் உணவின் விலை அதிகமென்பதால்
   (4) புலால் உணவைப் பெற்றுக்கொள்வது சிரமம் என்பதால்

16. சைவசமயத்தவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது, முதலில்
   (1) சற்றுநேரம் மௌனம் சாதித்தல் வேண்டும்.
   (2) தூரவிலகிச் செல்ல வேண்டும்.
   (3) இருகரங்கூப்பி வணக்கம் சொல்லி வாழ்த்த வேண்டும்.
   (4) கைகுலுக்கிச் செல்லுமிடம் பற்றி வினவ வேண்டும்.

17. திருக்கோயிலில் செய்யத்தக்கது
   (1) பெண்கள் அங்கப்பிரதட்சணம் செய்தல்
   (2) ஆண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்தல்
   (3) ஓடியாடி விளையாடுதல்
   (4) அமைதி பேணுதல்

18. திருவருட்பயன் நூலை இயற்றியவர்
   (1) மெய்கண்ட தேவர்
   (2) உமாபதி சிவாசாரியார்
   (3) மறைஞான சம்பந்தர்
   (4) அருணந்தி சிவாசாரியார்

19. கடவுளுக்குரிய இருவித நிலைகள்
   (1) தடத்தநிலை, சொரூபநிலை
   (2) முன்னிலை, படர்க்கைநிலை
   (3) அருவம், உருவம்
   (4) மகேசுவரன், சதாசிவன்

[பக். 3 ஐப் பார்க்க

20. வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் கருவறையில் மூலமூர்த்தியாகக் காணப்படுவது
    (1) நின்ற கோலத்தில் விஷ்ணு மூர்த்தி (2) சக்கரம்
    (3) சிவலிங்கம் (4) நாகதம்பிரான்

21. ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் சைவமரபைக் காத்து நிலைநிறுத்தியவர்களில் வரதபண்டிதர் ஒருவர் ஆவார். அவர் இயற்றிய நூல்கள்
    (1) சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம்
    (2) திருக்கரசைப் புராணம், பறாளை விநாயகர் பள்ளு
    (3) கல்வளையந்தாதி, மறைசையந்தாதி
    (4) தட்சிணகைலாய புராணம், திருச்செந்தூர்ப் புராணம்

22. இலங்கையின் பூர்வீகக் குடிகளான இயக்கரும் நாகரும்
    (1) இயற்கை வழிபாட்டினர். (2) சிவ வழிபாட்டினர்.
    (3) சக்தி வழிபாட்டினர். (4) எத்தெய்வத்தையும் வழிபடாதவர்.

23. சைவசமயிகளாகிய எமது செயற்பாடுகள் அனைத்தும்
    (1) எமக்கு மாத்திரம் நன்மை பயப்பனவாய் அமைதல் வேண்டும்.
    (2) எமக்கும் பிறர்க்கும் நன்மை பயப்பனவாய் அமைதல் வேண்டும்.
    (3) சுயநலம் கருதியே ஆற்றப்பட வேண்டும்.
    (4) பிறரை வெற்றிகொள்வதையே குறிக்கோளாகக் கொள்ளவேண்டும்.

- அட்டவணையில் A இலிருந்து I வரையிலான தகவல்களின் உதவியுடன் **24** ஆம் **25** ஆம் வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.

| விரதங்கள் | கடமைகள் | சிறப்பு அம்சங்கள் |
|---|---|---|
| A - ஆடி அமாவாசை | D - இறைவனைத் தியானித்தல் | G - பிதிர்க் கடமைகள் |
| B - சித்திரா பௌர்ணமி | E - உபவாசமிருத்தல் | H - சித்திரைக் கஞ்சி |
| C - கந்தசஷ்டி விரதம் | F - தீர்த்தம் ஆடுதல் | I - சூரசங்காரம் |

24. இறந்த தந்தையின் ஆத்மசாந்தியுடன் தொடர்பான தொகுதி எது ?
    (1) AEI (2) AFG (3) BEI (4) CEH

25. முருகப்பெருமானுடன் தொடர்பான தொகுதி எது ?
    (1) BEG (2) AEH (3) CEI (4) CFH

26. "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" - திருமூலர். இக்கூற்றிலிருந்து நீங்கள் விளங்கிக்கொள்வது யாது ?
    (1) அன்பு வேறு, சிவம் வேறு. (2) அன்பும் சிவமும் வேறல்ல; ஒன்று
    (3) எதையும் விளங்கிக்கொள்ள முடியாதுள்ளது. (4) சைவத்திற்குப் பொருத்தமற்ற கூற்று.

27. திருமணத்துடன் தொடர்புபட்ட அறம்
    (1) துறவறம் (2) இல்லறம் (3) பிரமச்சரியம் (4) வானப்பிரஸ்தம்

28. சகலகாலவல்லி மாலை
    (1) துர்க்கையின் அருளை வேண்டிப் பாடப்பட்டது. (2) இலக்குமியின் அருளை வேண்டிப் பாடப்பட்டது.
    (3) சரஸ்வதியின் அருளை வேண்டிப் பாடப்பட்டது. (4) திருமகளின் அருளை வேண்டிப் பாடப்பட்டது.

29. "கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்......" என்ற கந்தபுராணப் பாடலில் இருந்து பெறப்படும் உண்மை
    (1) முருகனும் சிவனும் ஒருவரே (2) முருகன் வேறு சிவன் வேறு
    (3) முருகனும் விஷ்ணுவும் ஒருவரே (4) முருகனும் பிரமாவும் ஒருவரே

30. மனிதரிடம் அகந்தை மமதை இருக்கக் காரணம்
    (1) மாயை (2) கன்மம் (3) ஆணவம் (4) இறைவன்

[பக். 4 ஐப் பார்க்க

47650

31. தலயாத்திரை
   (1) உல்லாசப் பிரயாணமாக அமைகின்றது.
   (2) விடுமுறையைக் கழிப்பதற்கு மேற்கொள்ளப்படுகிறது.
   (3) மாணவர்கள் ஒன்றுகூடி ஆடிப்பாடி மகிழ்வதற்கான ஒரு சந்தர்ப்பமாக அமைகின்றது.
   (4) இறைபக்தி, மன அமைதி, சாந்தி, ஆன்ம ஈடேற்றம் அடைய வழிவகுக்கிறது.

32. "என்கடன் பணி செய்து கிடப்பதே", என்று அறிவித்துச் சரியைத் தொண்டு ஆற்றி முத்தி பெற்றவர்
   (1) சம்பந்தர் (2) அப்பர் (3) சுந்தரர் (4) மணிவாசகர்

33. நாவலர் மணிமண்டபம் அமைந்துள்ள இடம்
   (1) கொழும்பு (2) மட்டக்களப்பு (3) நல்லூர் (4) வண்ணார்பண்ணை

34. "அதிகாலை நித்திரை விட்டெழு
எழும்போதே ஆண்டவனை நினை
காலைமாலைக் கடன்களைக் குறைவறச் செய்
உண்ணும் முன்பு ஒருகணம் இறைவனை நினை"
   – சித்தானைக்குட்டிச் சுவாமிகள்

   இவ் உபதேசங்கள்
   (1) வாழ்வில் மேன்மைபெற உதவுகின்றன. (2) தற்காலத்திற்குப் பொருத்தமற்றவை.
   (3) நடைமுறைக்கு ஒவ்வாதன. (4) பிற்போக்குத் தன்மை கொண்டவை.

35. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன
   (1) ஐம்பொறிகள் (2) பஞ்சபூதங்கள்
   (3) தன்மாத்திரைகள் ஐந்து (4) சிவதத்துவம் ஐந்து

36. நாட்டார் சமய வழிபாடு பொதுவில்
   (1) சமயம் சாராதது. (2) ஆகமம் சார்ந்தது.
   (3) ஆகமம் சாராதது. (4) வேதங்கள் சார்ந்தது.

37. முறிகண்டி, வற்றாப்பளை ஆகிய இடங்களில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்கள்
   (1) சிவன், அம்பாள் ஆலயங்கள் (2) கண்ணகி, முருகன் ஆலயங்கள்
   (3) பிள்ளையார், சிவன் ஆலயங்கள் (4) பிள்ளையார், கண்ணகி அம்மன் ஆலயங்கள்

38. மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புகளைக் கொண்டிருக்க வேண்டியது
   (1) வீடு (2) ஆலயம் (3) பாடசாலை (4) மடம்

39. சமகாலத்தில் வாழ்ந்த சமய குரவர்கள்
   (1) மெய்கண்ட தேவரும் அருணந்திசிவாசாரியாரும்
   (2) சுந்தரரும் மாணிக்கவாசகரும்
   (3) திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும்
   (4) அப்பரும் சுந்தரரும்

40. பாலாவி, பாவநாசம், சித்தாமிர்தபுட்கரணி என்பன
   (1) புனித்தலங்கள் (2) புனித விருட்சங்கள் (3) புனித நூல்கள் (4) புனித தீர்த்தங்கள்

* *

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

12 T II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2009 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2009 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2009

# ශෛවනෙරි II
# சைவநெறி II
# Saivaneri II

※ முதலாம் வினாவும் இரண்டாம் வினாவும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

※ முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினாவின் விடைக்கு 16 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 8 புள்ளிகளும் வழங்கப்படும்.

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்க விடை எழுதுக.

(i) எக்காரியத்தை நாம் தொடங்கும் போதும் இறைசிந்தனையுடன் ஆரம்பித்தால் ஏற்படும் நன்மை யாது?

(ii) மனித நேயப் பண்புகள் நான்கு எழுதுக.

(iii) சித்திரைப் புத்தாண்டுத் தினத்தன்று மேற்கொள்ளப்படும் நற்கருமங்கள் நான்கு எழுதுக.

(iv) திருமுறைகளைத் தொகுத்தவர் யார்? தொகுப்பித்தவர் யார்?

(v) அப்பர், மாணிக்கவாசகர் ஆகியோர் பின்பற்றிய நெறிகளைக் குறிப்பிடுக.

(vi) ஆன்மாவைப் பந்தித்திருக்கும் பாசங்கள் எவை?

(vii) சங்கம வழிபாடு என்பது யாது?

(viii) சைவநெறியின் சிறப்பு இலட்சணங்கள் இரண்டு எழுதுக.

(ix) திருக்கோயிலில் செய்யத்தக்க நான்கு திருத்தொண்டுகளைக் குறிப்பிடுக.

(x) சைவசமயிகள் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய நற்பழக்க வழக்கங்கள் நான்கு எழுதுக.

**2.** (அ) பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

(ஆ) அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

(i) "வேயுறு தோளிபங்கன் ......"

(ii) "மாறிநின் றென்னை மயக்கிடும் ......"

(iii) "விநாயகனே வெவ்வினையை ......"

(iv) "பக்தியால் யானுனைப் ......"

(v) "சிவசிவ என்கிலர் ......"

**3.** "விரதமாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விசேடமாக வழிபடல்." - நாவலர் பெருமான்

(அ) விரதங்கள் அனுட்டிப்பதன் நோக்கம் என்ன? விநாயகப் பெருமானுக்குரிய விரதங்கள் இரண்டு எழுதுக.

(ஆ) தைப்பூசத்தின் சிறப்பு, அத்தினத்தில் மேற்கொள்ளப்படும் நற்செயல்கள் பற்றி எழுதுக.

(இ) 'சூரசங்காரம்' என்பதால் நீங்கள் விளங்கிக்கொள்வது யாது? அது உணர்த்தும் உண்மைக் கருத்து என்ன?

**4.** "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்." - திருவருட்பயன்

(அ) திருவருட்பயன் நூலாசிரியர் யார்? அவருடைய குருவின் பெயர் என்ன? திருவருட்பயன் எத்தனை அதிகாரங்களைக் கொண்டுள்ளது?

(ஆ) சத்திபின்னமிலான் எனக் குறிப்பிடப்படுவர் யார்? ஏன் அவ்வாறு குறிப்பிடப்படுகிறார்?

(இ) முப்பொருள்கள் எவை? கடவுளுக்குரிய இருவித நிலைகளைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

[பக். 6 ஐப் பார்க்க

5. "பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி"

(அ) பூழியர்கோன் யார் ? புகலியர்கோன் யார் ?

(ஆ) திருஞானசம்பந்தர் பாடிய முதல் தேவாரம் எது ? அது பாடப்பட்ட சந்தர்ப்பத்தை விளக்குக.

(இ) திருஞானசம்பந்தர் செய்த அற்புதங்கள் இரண்டு எழுதுக. இலங்கையின் எத்தலங்கள் மீது திருஞான சம்பந்தர் தேவாரத் திருப்பதிகங்கள் பாடி அருளினார் ?

6. "ஆலயந் தொழுவது சாலவும் நன்று"

(அ) தட்சிணகைலாயம் எனப் போற்றப்படும் தலம் யாது ? அத்தலம் அவ்வாறு போற்றப்படுவதற்கான ஆதாரம் என்ன ? அது பற்றிக் கூறும் நூல் யாது ?

(ஆ) தான்தோன்றியீச்சரம் என்பதால் நீங்கள் விளங்கிக்கொள்வது என்ன ? எமது நாட்டிலுள்ள தான்தோன்றியீச்சரங்கள் இரண்டின் பெயர்களை எழுதுக.

(இ) திருக்கோணேச்சர ஆலயத்தின் மூர்த்தி மற்றும் தலச் சிறப்புக்களைச் சுருக்கமாக எழுதுக.

7. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்புரைகள் எழுதுக.

(அ) பாடசாலையில் சமய விழாக்கள் கொண்டாடப்படுவதன் முக்கியத்துவம்

(ஆ) ஆடிப்பிறப்பு

(இ) யோகர்சுவாமிகள்

(ஈ) நவராத்திரி

(உ) "மக்கள் சேவையே மகேசன் சேவை"

* * *